மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஒன்பது அம்ச கோரிக்கையில் அதுவும் ஒன்று. ஆகவே, அதுவும் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சின்னராசு : பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களைப் போலவே ஊராட்சி மன்றங்களிலும், பேரூராட்சிகளிலும் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்கள் பலயிடங்களில் 100 ரூபாய்க்கும் குறைவாகச் சம்பளம் பெறுகிறார்கள். ஆகவே, அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தை உயர்த்தி குறைந்தபட்சம் 200 ரூபாயாவது கிடைக்கச் செய்கின்ற நிலைமையும் இந்தத் திட்டத்தோடு பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர்களெல்லாம் பார்ட் டைம் ஒர்க்கர்களாக இருப்பவர்கள். பகுதி நேர ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று சொன்னால்தான் அப்படிப்பட்ட நிலையை உருவாக்க முடியும். ஆகவே, அதைப்பற்றி அரசினுடைய பரிசீலனையிலே தற்போது இல்லை.

தார் போடுவதற்குப் பதிலாக வேறு பொருள் போட நெடுஞ்சாலைத் துறை மேற்கொண்ட ஆராய்ச்சி

*வினா எண். 707—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நெடுஞ்சாலைத்துறை ஆய்வு நிலையம் தார் போடுவதற்கு பதில் வேறு பொருள் போட ஆராய்ந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) பழுப்பு நிலக்கரி தாரிலிருந்து சாலை பிணைப் பொருள் தயாரிப்பதற்கான சோதனைகள் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. பிணை பொருள் தயாரிக்கும் முன்னோடி இயந்திரம் நிறுவப்பட்டு வெள்ளோட்டம் விட உள்ளது.

1982 ஏப்ரல் 1]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, தற்பொழுதுள்ள தார் பற்றாக்குறையின் காரணமாகத் தமிழகத்திலே உள்ள பல்வேறு சாலைகளிலேயெல்லாம் பழுது பார்க்காமல் இருக்கின்ற சூழ்நிலை இந்த இலாகாவில் இருக்கிறது. இப்பொழுது புதிதாகத் தாருக்குப் பதிலாகக் கண்டுபிடிக்கப்படும் மாற்றுப்பொருள் எவ்வளவு காலத்தில் வெள்ளோட்டம் விடப்பட்டு நடைமுறைக்கு வரும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா? இது நடைமுறைக்கு வந்தால் தாரை விட இதற்குச் செலவு குறைவாக ஏற்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட பெட்ரோலியப் பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக இதுபோன்ற ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டிய நிலை வந்தது. குறிப்பாக ஆங்கிலத்திலே ஒரு பழமொழி உண்டு. Necessity is the Moth r of i..ve tion என்று சொல்வார்கள். அதைப்போல தேவை ஏற்படுகின்ற நேரத்தில்தான் இதுபோன்ற நிலையை நாம் அனுஷ்டித்து உடனடியாக மறு ஆய்வு செய்து அதன் மூலம் புதிய பிணைப் பொருள் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் 2,40,000 ரூபாய் செலவில் ஒரு டன் உற்பத்தி செய்யக்கூடிய அந்தப் பிணைப்பொருள் நிலையம் சீக்கிரத்திலே நிறுவப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, நான் அறிய விரும்புவது தாருக்கும் இந்தப் பிணை பொருளுக்கும் பொருளாதாரத்திலே சிக்கனம் ஏற்படுகிறதா? இதனால் அரசுக்கு இலாபமா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதற்குப் பதில் அளிக்க வேண்டும். இரண்டாவதாக, இப்பொழுது நம்முடைய அமைச்சரவர்கள் இந்தக் கேள்வி வந்திருக்கின்ற சமயத்தில் டெல்லிக்குச் சென்றிருந்தார்கள், தார்கேட்பதற்காக. அதிகமான தாரைப் பெற்று வந்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்தப் பிணைப்பொருள் பாக்கியிருக்கக் கூடிய தாரைக் காட்டிலும் எக்கனாமிக்கலாக —பொருளாதார ரீதியிலே குறைந்த செலவினை உடையதாக இருக்கிறது. அதனால்தான் நாம இதை உடனடியாகக் கண்டுபிடித்திருக்கிறோம் கண்டுபிடித்து இனிமேல், இப்படி இருக்கின்ற இந்த ஆண்டிலே ஆலை ஏற்பட இருக்கிறது. 2,40,000 ரூபாய் செலவிடுகின்றோம். நெய்வேலி பழுப்பு நிலக்கரியிலிருந்து வீட்டு உபயோகத்திற்காக புகையாத

லீக்சோ என்று சொல்லக்கூடிய கரி தயாரிக்கும்பொழுது இந்தப் பிணைப்பொருள் நமக்குக் கிடைக்கிறது. இது பழுப்பு நிலக்கரி தார் என்று சொல்லி இது நமக்குக் கிடைக்கிறது. ஆனாலும் இதை நேரடியாகப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை. ஆகவே இந்தத் தாரை நேரடியாக—அதாவது பழுப்பு நிலக்கரி தாரை நேரடியாகக் காய்ச்சி வடிக்கும் முறை என்கின்ற முறையில் இதைத் தயார் செய்து கிடைக்கின்ற பிணைப் பொருளைப் பயன்படுத்தலாம் என்ற நிலையை ஆராய்ச்சி நிலையம் கண்டுபிடித்திருக்கிறது. குறிப்பாக சமீபத்தில் நான் டெல்லிக்குச் சென்றது தார் கேட்பதற்காக இல்லை. தார் இப்பொழுது வந்து கொண்டிருக்கிறது. வந்து கொண்டிருக்கின்ற தாரை நிறுத்தாமல் பார்த்துக் கொள்ளத்தான் நான் சென்றேன். போன ஆண்டு தார் குறைவாகக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். இப்பொழுது சுலபமாக நமக்குக் கிடைக்கிறது. அப்படிச் சுலபமாகக் கிடைக்கும் நிலையை மீண்டும் அமல்படுத்த வேண்டுமென்பதற்காக 'கர்ட்டசி கால்' என்ற முறையிலே திரு. சிவசங்கர் அவர்களைச் சந்தித்து வந்திருக்கிறேன். கண்டிப்பாக இந்த ஆண்டு தார் பற்றாக் குறை ஏற்படாது என்று நான் நினைக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பழுப்பு நிலக்கரி தாரின் பிணைப்பொருளைப் பயன்படுத்துவது பற்றி அமைச்சரவர்கள் கூறினார்கள். மலேயா போன்ற நாடுகளிலே இரப்பரைத் தாரில் கலந்து ரோடு போடுகிறார்கள். நமக்கு அந்த அளவிற்கு முடியாது என்றாலும் பால்கள்ளி, திருகுகள்ளி என்று சொல்வதிலிருந்து கிடைக்கும் பொருளைக் கொண்டு பயன்படுத்தலாம் என்று நினைக்கிறேன். எனவே, வெட்டவெளியில், கட்டாந்தரையில் விளையும் இந்தத் திருகுகள்ளி, பால்கள்ளி ஆகியவைகளை இந்த அரசு பயன்படுத்திக் கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, பால்கள்ளி அல்லது திருகுகள்ளி போன்ற ஆராய்ச்சிகள் இப்பொழுது இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்வது—புதிய ஆராய்ச்சியைச் சொல்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நிலையிருந்தாலும் அதையும் பரிசீலிக்கலாம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, தார் பற்றாக்குறை இருப்பதால் மற்ற சில மாநிலங்களில் செய்வதைப்போல நம் மாநிலத்தில் இரப்பர் அதிகமாகக் கிடைப்பதன் காரணமாக, தாருக்குப் பதிலாக ரோடு போடுவதற்கு இரப்பரைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1982 ஏப்ரல் 1] (முற்பகல் 9–40)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, தார் போட முடியாத சூழ்நிலையிலே நாம் இருந்து கொண்டு இருக்கிறோம். ஆகவே, ரப்பர் போடவேண்டும் என்று சொன்னால், கன்னியாகுமரி மாவட்டத்தில் வேண்டுமானால் போடலாமே தவிர, பாக்கியிருக்கும் மாவட்டங்களில் போடுவதற்கு ரப்பர் கிடைக்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாரை விட ரப்பர் 10 மடங்கு விலையாகும். கன்னியாகுமரி மாவட்டத்தில் கூட போடுவதற்கு முடியாது.

சென்னை நகரைச் சுற்றி புற வழிச் சாலை அமைக்கும் திட்டம்

*வினா எண் 708—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரை சுற்றி Bye-pass சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) தேசிய நெடுஞ்சாலை எண் 45, 4 மற்றும் 5-ஐ இணைத்து சென்னை நகருக்கு புற வழிச்சாலை அமைக்கும் வேலையின் மதிப்பு 1980–81 வீதங்களைத் தழுவி ரூ. 995 இலட்சம் ஆகும். இச்சாலையின் மாற்றப்பட்ட நேர்பாடானது இந்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டு, அது தற்பொழுது மத்திய அரசின் நிதிக் குழுவின் பரிசீலனையில் உள்ளது. இந்திய அரசால் ஒப்பளிக்கப்பட்ட 1980–85 ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 240 இலட்சம் நில உரிமைக்காகவும் மண்வேலைக்காகவும், வடிகால் வசதிக்காகவும் தொகை கொடுக்கப்பட்டுள்ளது. நில உரிமை பெறல் மதிப்பீடு முடிவாகும் தருவாயில் உள்ளது.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரைச் சுற்றி பை-பாஸ் சாலை அமைக்கும் திட்டம் மிகவும் அவசியமானது. அதேநேரத்தில் சென்னை நகரில் பூமிக்கடியில்—பாதாள ரயில் விடும் திட்டம் பற்றி மாண்புமிகு போக்குவரத்து அமைச்சரிடம் பேசப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.